3539

ஸ்ரீ

ரமண சரித அகவல்

M. சிவப்பிரகாசம் பிள்ளை, B.A., அவர்கள்

இயற்றியது.

ஸ்ரீ ரமணாச்ரமம்,

திருவண்ணாமலை.

ஸ்ரீ

ரமண சரித அகவல்

அனுக்கிரகம், ரமணபாதமாலை,

அநுபந்தத்துடன்.

3539

M சிவப்பிரகாசம் பிள்ளை, B A, அவர்கள்

இயற்றியது.

மூன்றாம் பதிப்பு

SRI RAMANASHRAMAM BOOK DEPOT,
TIRUVANNAMALAI (SOUTH INDIA)

இது

திருவண்ணாமலை, ஸ்ரீ ரமணாச்ரமம், காரியதரிசி

நிரஞ்சனானந்த சுவாமிகளால்

பிரசுரிக்கப்பட்டது.

1931

All rights reserved.] [விலை அணா 3.

ஸ்ரீ

ரமண மஹர்ஷி

சரித்திர சங்கிரகம்.

முகவுரை.

அல்லமப்பிரபுவால் அறிவிக்கப்படும்வரையில், மருள சங்கரரென்னும் ஞானியின் பெருமையை நந்திதேவரின் அவதாரமாகிய பசவண்ணரே உணர்ந்திலரென்றால், பிறக்கும்பொழுதே அருணாசலத்தியானத்துடன் பிறந்து அத்தியானத்தால் அனேகவருடம் [illegible] செய்து, பதினேழாமாண்டிற் [illegible] திருவண்ணாமலைக் கிழுக்கப்பட்டு, ஆண்டு துறவு பூண்டு, ஆன்மவிசார முற்றுப் பலவருடம் அருந்தவமியற்றி, "தன்னையுந் தனக் காதாரத் தலைவனையுங்கண்டு, பின்னையத் தலைவன்றனைப் பிரமமாய்ப் பிறப்புத்தீர்ந்து," அத்தலத்தின்கண் குருமூர்த்தமாய் மலைமேல் வீற்றிருந்து, உலகத்தைப் பவித்திரஞ் செய்தருளும் இச்சீவன்முத்தருடைய மகிமை அடியேன் அறியுந்தரத்ததோ? அன்றெனத்தெரிந்தும் இச் சரிதையை இயற்றத்துணிந்த என் மனத்துணிவை மன்னிக்கும்படி அன்பர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று."

மு. சிவப்பிரகாசம்.



பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி

சரிதம்.

அகவல்.

காப்பு.

ரமண சரித்திர ரசந்தைப் பாட.
வடமலை கணபதி பதந்துணை யாமே.

நூல்

பிரம மென்னும் பெயரறி யாமலே
பிரம ஞானம் பெற்ற புலவர்,
கடவு ளின்றிக் காணு முலகம்
நடைபெறு மென்னு நாத்திகர் கூறை
யுலக மெங்கு மோங்கி யடித்து
நிலைமையைக் குலைத்து நலியுங் கலியி
லரன்றிரு நாம மநத்தி னினைத்தவ
வரன்றிரு வருளா லின்பதம் பெற்றவர்;
ஐம்பொறி நுகர்வா னடைசிற் றின்பே
யிம்மகி தன்னி லெய்துதற் குரிய
பெரும்புரு டார்த்தம் பேறாவே றிலையது
வருமவழி யெல்லாம் வரவரப் பெருக்கலே
முதன்மைக் கடன்மாந் தர்க்கெனு மூடமாம்
பதுங்கிப் பரந்த புல்லறி வெழிலி
யில்லறந் துறவற மெனுநன் மழைபொழி
நல்லறி வென்னு நலமிகு முகிலைத்

தலையெ டாமற் றடுத்து மறைத்துப்
புலைமுதற் பாவப் புன்மழை சொரிந்தே
யின்புபோன் முளைக்கு மெவ்வப் பயிரைக்
கொன்னுற வளர்க்குமிக் கொடுங்கா லத்தி
லான்ம சுகமே யந்த மில்லா
மேன்மைத் தன்மை விளங்கிய வின்ப
மென்றுமெக் கருமமு மிகந்திட லாய
சன்னி யாசமே தலையதச் சுகத்தில்
விருப்ப மிகுந்த முமுட்சுக் கென்றுந்
திருத்தமாய்த் தெரிந்த துறவறத் தலைவர் ;
அனைய சுகத்தை யடைய வேண்டின்
மனதை மாய்க்க வேண்டு மென்று
மாணு மனதை மாய்ப்ப தற்கு
நாணு ரென்னு ஞான விசாரமே
நேர்வழி யென்றந் நெறியி னடந்து
பேர்புகழ் பெற்ற போத குரவர்.
இப்பெரு மகிமை யெய்திய மஹர்ஷி
யொப்பில் சிவன்கோ லோச்சிய நாட்டில்
வாத வூரர் வனப்பார் செய்யுளு*
நாதன் றேழனார் நல்லிசைப் பதிகமுஞ்*
சூட்டித் துதித்த சுழியற் பதியில்
வேட்டற் குரிய வேதியர் குலத்திற்
பராசர மஹர்ஷி பழங்கோத் திரத்திற்
கிராதத் தன்மை கிஞ்சிது மின்றி
வக்கீற் றொழிலே வாகாய்ப் பூண்டு
புக்கார் பசித்துயர் போக்கு மருளினர்

* இவற்றை நூலிறுதியிற் காண்க.

சுந்தர மையர் தொல்தவப் பயனு
யந்தநற் கற்பின ளழகம் மாள்பா
* னிகழ்கலி நாலொடெண் பதாமுறை நிகழத்
தகுபிர மாதியிற் றனுபதி ஞாறு
மேடஞ் செவ்வாய் மிதுனங் கேது
வோடுஞ் சசிதே ளுசனு புதனுந்
தனுரவி ராகு தனிகுரு கும்பஞ்
சனிமீன் றங்கிட சன்மலக் கினந்துலாம்
† புனிதநட் சத்திரம் புணர்மதி தினத்தி
லநந்தை மாக்க ளறிவுபெற் றுய்யப்
பரம னடியார் பயமுந் தீரத்
திருவவ தாரஞ் செய்தனர் மாதோ.
திங்கள் போலச் செழித்து வளர்கையில்
வெங்கட ரமணனென் வினைதீர் நாமம்
பெற்றோ ரிட்டுப் பருவம் பெறலுந
தற்கா லத்தின் றன்மைக் கேற்ப
வாங்கிலப் பள்ளியி லன்புடன் வைத்துப்
பாங்காய்க் கல்வி பயிற்றி வநதனர் ;
திண்டுக் கல்லுந் திருமது ரையுமிப்
புண்ணியர் கற்ற புனித பதிகளாம்.
அணைத்தினு மிகப்பெரி தருணு சலமெனு
முணர்ச்சி யுரைப்போ ரொருவரு மின்றிப்
பகுத்தறி வில்லாப் பருவ முதலா
யகத்தில் விளங்க வதையறிந் தடைதற்
குற்று விருப்ப மொழிந்த பொருள்களிற்

---

* னிகழ்கலி யையா யிரமுன் னிகழத் (எனவும் பாடம்).
† (புனிதம்—புனர்பூசம்).

பற்றிலாப் பான்மை பொருந்திப் பிறன்மேல்
விழைவு வைத்த வனிதை விட்டுக்
கொழுநன் பணிசெய் கொள்கை போலப்
படித்தும் படியாப் பாடங் களையு
முடனுள பிள்ளைக ளொப்பிக் கையிற்கேட்
டவதா னத்தா லறிந்தொப பித்து
மூவந் திளை யாரோ டொத்துக் கூடிப்
பலமுந் தீரமும் பரிவுங் காட்டிப்
பலவிளை யாட்டிற் பழகியும் வந்தனர்.
பன்னிய வண்ணம பதினே ழாண்டின்
முன்பிறந் தாருடன் மூதூர் மதுரையிற்
றந்தை காலந் தனக்குப் பிறகு.
தந்தையின் றமபி சம்ரட் சணையி
லாரும் வகுப்பை யடைந்து படிக்கையி
னீரார் வேணி நின்மல னருளால்
விளைந்த வற்றை விணையி னேற்கு
விளங்கிய மட்டில் விளம்பிடு வேனே.
பாட சாலையிற் படித்த வாங்கில
பாடையி லுள்ள பௌதிக நூலா
லுலகப் பொருளெலா மொன்றே யென்றும்
நிலையில வென்றும் நெஞ்சி லுணர்ந்து
சிறிய தந்தையின் சிறப்பார் வசனப்
பெரிய புராணப் பெயரிய நூலைப்
படித்தடி யார்கள் பத்திக் கிரங்கிக்
கடவுள் புரியுங் கருணையின் றிறங்கண்
டென்மா னத்தை யோட்டி யுளத்திருந்
துடலிற் றிருநீ றுவப்புட னணிந்து

சுந்த ரேசன் சன்னிதி துன்னி
வந்தனை புரிந்து வளரறு பத்து
மூவர் சிலைகளின் முன்ன ரணுகி
யாவலொய்த் தம்மை யவரினத் தொருவராய்க்
கூட்டிக் கொளுமபடி கூவி யிரந்து
நாட்டநீர் விட்டு நைந்துளம் பதறினர்.
முன்வினை யாட்டமொ முடிவுற் றனவே ;
மின்னனூர் மோகமும விளிந்தது முளைக்குமுன்.
அருணு சலததை யறிதற குற்ற
விருப்பிவ் வண்ணம் விளைந்தோர் தினந்தெரு
வருதன் பந்துவை வருவதெங் கிருந்தென
வருணு சலத்திருந் தெனக்கேட் டதிசயித்
தருணு சலமெங் கமர்வ தெனவவர்
திருவண் ணுமலை தெரியா தாவென
மனந்தெளி யாமன் மயக்குற் றிருக்கையிற்
றனுவிலோ ரெரிவைத தலைவ னேவினன்.

7-ம் பக்கம் 15-16 வரிகட் கிடையில் அடியிற் கண்ட
10-வரிகளையுஞ் சேர்க்க

மனதினி லொருநாண் மரண முடனே
யடையப் போவதா யச்சம் பிறக்க
மடிவார்க் கென்னு மடமறு விசாரம்
மனதினி லுடனெழ மரண முடலுறு
மெனதுடல் யானன் றியானறி வதனு
லெனக்கெக் காலு மிறப்பே யில்லை ;
இனையவா றெண்ணித் தெளிந்துள முடனவ்
வச்ச மகன்றன ரதன்பின் மரண
வச்சமெக் காலுமே யடைந்தில ரம்மா !
இனையவா பற்றற் றிருக்கையி லிவர்தந்

யன்று காட்ட வாசான் வரும்படி
சொன்ன வண்ணந் துரிதமாச் செல்வதா
முன்வந் தாருடன் மொழியமற் றவர்தாங்
கொடுக்க வேண்டிய கழகக் கூலியை
யெடுத்துப் போம்படி யேவின ரேவலும்
பெட்டியைத் திறந்தளி பணத்தைப் பெற்றுச்
சட்டென் றெருசிறு சீட்டிற் றமென்
றந்தை தாளைத் தேடிச் செல்கிறேன்
சிந்தை வருந்தித் தேடற்க நீவிரென்
றெழுதி யதையோ ரிடத்தில் வைத்துப்
பழைய தேச படமொன் றெடுத்ததிற்
றிருவண் ணாமலைத் தலத்தைத் தேர்ந்ததற்
கிருப்புப் பாதை யில்லை யென்றுந்
திண்டி வனம்வரை சென்றப் பாதையா
யண்டையிற் கண்ட வண்ணா மலைக்குப
போகலா மென்றும் புத்தியி லெண்ணி
வேக மார்புகை வண்டிகள் விளங்கு
சாலையை நோக்கிச சென்றனர் தமையன்
வேலையீங் கென்னென விளம்பிய வாறே.
சென்னை நகர்க்குச் செல்லும வண்டி
நண்ணற் குரிய நாழிகை தப்பிச்
சென்றன ரெனினுந் தெய்வச் செயலா
யன்றது வந்த தவர்போ யுற்றபின்.
திண்டி வனத்துச் சீட்டு வாங்கி
வண்டி யேறியோர் மூலையில் வைகி
யேகும் வழியி லேறியோர் முதிய
சாகிப் பிவரைச் சாருமூ ரேதென

வண்ணு மலையென் றறைந்துமற் றவரால்
வண்டி போகும் வரலா றறிந்து
விழுப்புரம் போம்வரை விழுத்தியா னத்தி
லழுந்தி யிருந்தவ ரவ்விட மேயிழிந்
தூரி னுட்சென் றுறுபசி யாறி
யேறி வண்டி யெஞ்சிய பொருள்கொடு
மாம்பழப் பட்டு வரையிற் சென்று
பூம்பதம் வருந்தப் பூமியி னடந்துபோ
யறையணி நல்லூ ரடைந்தங் குள்ள
வறையணி நாத னுலயம் புகுந்தோ
ரிலிங்கப் பாங்க ரிருக்கையிற் றியானத்
திலங்கிய தோர்பெரு மெழிலார் சோதி.
சுவாமி தமக்குத் தோன்றிவிட் டனரென்
றவாவுட னேக்கலு மவ்விலிங் கத்தைக்
கல்வடி வன்றிக் கண்டில ரொன்றுமே.
* துல்லிய மில்லான் றுணைத்தாட் பூசை
பண்ண வந்த பார்ப்பன ருடன்போய்
நண்ணிக் கோவலூர் நாடுவீ ரட்டங்
கதவைக் காபபுச்செய் காலம வரையிற்
சிதையாத் தியானஞ் செய்துகொண் டிருந்துபின்
னின்னியக் கார ரெய்துதற் குரிய
வன்னத் தினையவ ரருளாற் பெற்றதின்
மனஞ்செல் லாமன் மறுக்கவுஞ் சிறிதுண்
டினிய தியானத் திரவையுங் கழித்தனர்.
மறுநாட் காலையோர் மறையோ ரிடத்திற்
குறைந்த தொகைக்குக் கடுக்கனைக் கொடுத்துப்

* துல்லியம் - உவமை.

பிற்பகல் வீட்டுகள் பெற்றிடு மிடஞ்சென்
றற்பொழு தங்குறைந் தடுத்த காலைப்
புகைவண்டி யேறிப் போகையி லருகி
லகமிகக் களிப்புற் றண்ணு மலைகண்
டிறங்கி வண்டிவிட் டேகிக் கோயிலு
ளருணை சலேசனை யணுகி வணங்கி
சன்னிதி வந்துவிட் டேனெனச் சாற்றலுந்
தன்னுட றன்னைத் தகித்து வந்த
வெரிவு நின்றதவ் விறையி னருளினால் ;
அறிகிலேன் மற்றென் னடுத்தன வென்றே.
அடைந்தப் பொழுதே யையன் குளக்கரை
குடுமியை மழித்துக் கொண்டு மிகுந்த
பொருளோ டாடை பூணு நூல்களை
யெறிந்தோர் கோவண மிடையிற் றரித்துத்
திரும்பிப் புகுந்து திருவா லயத்து
ளருணை சலத்தை யாய்ந்த மனதைத்
திருப்பினா னெனத் தன்னைத் தேடி
யரிய நிட்டையி லமர்ந்தனர் மௌனியாய்.
ஆதியிற் சிலநா ளயல்வரு ணத்தார்
சாத முண்ணச் சகியா துள்ளம்
பழமும் பாலும் பருகிப் பின்ன
ரொழித்தன ரந்த வுலகா சாரமும்.
தேய மெல்லாந் துதிக்கச் சிறந்தவ
ராயிரங் காலுள வகன்ற மண்டபஞ்
சுப்பிர மணியர் தூய வாலயம்
பொற்பறு பூரணப் பாதாள லிங்க
மீகை மாறு விலுப்பை மரத்தடி

வாகன மண்டபம் வாழைத் தோட்ட
மென்னு மிடங்களி லிருந்தும் பல்மதி
பின்குரு மூர்த்தமென் பெயருள மடத்தின்
றம்பிரான் வேண்டத் தாமுடன் சென்றே
யம்மடத் திருந்து மருகினி லுள்ள
தோட்டத் துள்ளொரு தொல்லித ணமைக்கக்·
கூட்ட மின்றியக் குசசினுட் டங்கியுஞ்
சுமாரிரண் டாண்டு சொரூபந் தன்னிற்
சமாதி செய்தனர் தைல தாரைபோல்.
குருமூர்த் தத்துங் கோயி லுளுமிவர்
புரிமா தவத்தின் பெருமையை யுணரி
னற்றவ மென்று ஞான மென்று
முற்கா லத்தின் முயன்றன ரென்றுஞ்
சாத்தி ரங்களிற் சாற்றுவ தல்லா
னேத்தி ரங்களா னேரிற் கண்டவ
ருளரோ வென்றை யுற்ற வெனைப்போற்
களங்க மெய்திக் கலங்கி டாரே.
இருந்த விடத்திற் கேகி யளித்ததை
யருந்தியோர் வேளை யற்பமாய் மருந்துபோன்
மலசலஞ் சுருங்கி மனமல மங்கி
யலம்பல் விளக்க லறலின் மூழ்க
லாகிய கருமமு மகற்றி வினைசெய்
யாகமோ வியம்போ லசைவற வமர்ந்து
சகலகே வலங்களிற் சாரா துளத்தை
யகமெனுஞ் சுத்த வான்ம நிலையி
லிருத்தி யந்த வேகாந் தத்தி
லருந்தி வந்தன ரான்ம சுகத்தையே.'

கல்லா லெறிந்துங் காய மீது
பொல்லார் சிறுநீர் பொழிந்து மெதிரி
லோட்டை மட்கல முடைத்தும் வேறுதீச்
சேட்டைகள் செய்துஞ் சித்தஞ் சலித்திலர்.
தலைமயிர் விரிந்து தளிர்நகம் வளர்ந்து
மலர்ந்து திருமுக மற்றவை கூம்பி
விழிக ளிரண்டும் வெளிநோக் கின்றி
யழிந்து தசையழ கார்ந்து தவவழு
கத்திப் பஞ்சர மாகி யுடல
மித்தவ முனிவ ரிலங்கின ரக்கால்.
சிற்சுக மதனிற் சித்தம் லயமா
யற்பமும் பிராண னசையா.தொடுங்கி
யிரத்த நாடிக ளியக்கமு நின்று
மரித்த மறிபோல் விழியிமை யாம
லிறந்தன ரோவென் றெண்ணங் கொளும்படி
சிறந்து விளங்கினர் சிற்சில சமயம்.
சகசநிர் விகற்ப சமாதி சித்தித்
தகமெனு மூல வவித்தை யழிந்து
கருதவுங் கழறவுங் கூடா நிலையை
மருவிப் பின்ன ரவ்விட மாறிக்
குறுகிப் பவளக் குன்றை யதன்கணுங்
கிரிமிசை யேறிக் கீழ்க்குகைக் கண்ணுங்
குகைநம சிவாயர் கோயிற் கண்ணு
மிகுசாந்த மூர்த்தியாய் விளங்கிச் சுமாரிரு
வருடம் வதிந்து வந்தன ரக்கா
லருந்தினர் தெருக்களி லளித்திடு பிட்சையும்.
இதன்பின் பெரிய வெகின்க ளிடையிற்

கதித்தோ டருவியின் கரையழ காக
விருபாட்ச மென்று விளங்கு குகைசேர்ந்
திருந்துபல் லாண்டுமுன் னிருந்த படியே
பூதலத் தினர்பாற் பேரருள் பொருந்தி
மாதர் திருவாய் மலர்ந்து சகல
வேதா கமங்களின் விரிபொருள் சுருக்கி
வாதாட லின்றி வந்தடை வோர்க்குப்
பேதைமை நீங்கிப் போத முதித்திடத்
தீதிலின் மொழிகளாற் செப்புவா ராயினர்.
திருமுக மலர்ந்து செந்தா மரைபோற்
கருணை நிறைந்து கண்கள் கடல்போற்
றலைமுண் டிதமாய்த் தம்முரு பொன்னாய்க்
கலையோர் கீளார் கோவணங் கவின
வளவு படாத வாற்றற் குறியுடன்
விளங்குவ ரானார் வேளை வென்றவர்.
தேகப் பற்றைத் தெறித்தவ ரெனினுந்
தேக முஞ்சிவ சொரூபமாத் தேறலாற்
செய்தற் குரிய சுத்திகள் செய்து
துய்ப்பா ரானார் சுவைபா ராம
லெத்தன் மைத்தோ ரீயு முணவையுங்
கர்த்தன் பூசனை கைக்கொளு மாபோல்.
முமுட்சுக்க ளன்றி மூடான் மாக்கள்
சமயா சாரந் தள்ளிற் றீதே
விளையு மென்று விளக்கத் திருநுதற்
களன்களி; றினமுங் கவினுறத் திருநீ
றணிவா ரானா ரனைத்து நீத்தவர்;
பணிந்து சரியை பண்ணு விடினுங்

குற்ற மென்று குறித்தற் பொருட்டுக்
கற்றவர் சுற்றுங் கிரிப்பிர தக்ஷிணைஞ்
சிற்சில சமயஞ் செய்வா ராளு
ரற்றவர் பேத மற்பமு மின்றியே.
விண்மணி யுலகில் விகார முறும
லெண்ணில் கருமம் மியற்றுதல் போல
விரும்பு மடியார் வினைகள் தீரக்
கரும்புபோ லினிக்குங் காட்சிதந் தருளியு
மனமே பகையதை மாய்மினென் றிசைத்தம்
மனதை மாய்க்கும் வழியறி வித்தும்
பலவித நூல்களைப் படித்துக் காட்டிக்
கலைகளி னுத்த கருத்தை விளக்கியுங்
குடும்பக் குறைகள் கூறிடு வோர்கள்
மடமற நீங்கி மகிழ்வுற வருளியுங்
குரங்கா திகட்கிரை கொடுத்துத் தமக்குச்
சருவ சீவருஞ் சமமென் றுணர்த்தியு
மச்சுப்போற் கையா லழகுற வெழுதியு
மச்சங் கொடாம லமர்ந்தடி யாருடன்
குடுக்கை கமண்டலங் கோல்முத லானபல்
வடிவப் பொருள்களை வனப்புறச் செய்துஞ்
சிலசம யங்களிற் சமையல் செய்து
மிலைகள் தைத்து மெடுத்துப் படைத்து
மெத்தொழில் செய்யினு மேதமின் முத்தன்
சித்த முறையுஞ் சிவத்தெனை விளக்கியுந்
தேச மெங்குந் திருப்புகழ் பரப்பி
வாசஞ் செய்தனர் வையமின் புற்றிட.
திருமுலைப் பாலெனுந் தீர்த்தக் கரையி

னருகி லுளவோ ரழகார் குகையிலும்
வதிந்தனர் மன்னுயல் வேனிற் காலம்.
பதிமஹா மாரியாற் பாழ்படு போழ்து
பச்சை யம்மன் பவனத் திருந்தன
ரச்சமுஞ் சோகமு மகற்றி நின்றவர்.
குருமூர்த் தத்தி லருந்தவஞ் செய்கையிற்
பிறந்த விடத்தின் பெயரைச் சொலுமபடி
வருந்தியோ ரன்பர் வணங்கி வேண்டத்
திருச்சுழி யென்று தெரித்தன ரெழுதி.
சிறிய தந்தையின் செவிக்கி தெட்டிய
பரிந்து வந்து பார்த்து மீண்டனர்.
பவளக் குன்றம் பற்றின பிறகு
தவத்திற் சிறந்த தாயுந் தமையனுஞ்
சென்று கண்டுதந் தேய மழைத்தனர் ;
நன்றென் றிசைந்திலர் நின்றவ ரருள்வழி ;
நடக்கற் பாலது நடந்தே தீரு
நடவாத தென்றும் நடவா தென்றிவ
ரெழுதிக் காட்டலு மேங்கித் திரும்பின
ரழுங்கா தவருள மாற்றற் பாலதோ ?
அடைந்த பின்றிரு வண்ணா மலையை
யிடுவோ ரொருவரு மின்றித் தானே
பிராமண சுவாமிப் பெயரு ரெங்கும்
பராவிப் பாரிற் பிரசித்தி யுற்றது.
விருபாட்சஞ் சேர்ந்தபின் வெகுநாள் கழித்திவ
ரரிய நிலையை யாய்ந்துநன் குணர்ந்தவர்
காவிய கண்ட கணபதி பண்டிதர்
மேவி ரமண மஹர்ஷி வெல்பெயர்

பரவப் புனைந்தருள் புரிகவென் றியம்ப
வொருவித பதிலு முரையா திருந்தனர்.
அந்த நாண்முத லப்பெய ரன்பர்
சிந்தைக் கினிய திருவமு தாயதே.
பதினை யாண்டுகள் படர்ந்த பின்னர்த்
துதிசெய் தொண்டர் சிலர்நூ தனமாய்
நீர்நல னிழனல னிலையுற் றமைந்த
சீர்மிகு கந்தாச் சிரம மென்னு
முன்னத மான வுத்தம தலத்திற்
சுண்ணச் சாந்தாற் பண்ணுதா பதத்தை
மேவி யருளி மேன்மேல் வந்து
சேவித் தடைந்தோர் சிறுமைதீர்த் தருளினர்.
தவநெறி முனிவரைப் பவளக் குன்றுசென்
றவமே யழைத்துத் திரும்பிய வன்னையை
மூத்த தனயன் காத்து மரித்தபின்
சீர்த்தி ரமணன் செனித்தபின் செனித்தவர்
நாக சுந்தர நற்பே ருற்றவ
ரோகையே யுறுமா றேம்பி வந்தனர்.
தன்னடுக் குமரன் றரணி வணங்க
மன்னு ஞான மண்டல மன்னனாய்
விருபாட் சத்தில் வீற்றிருந் தருளலை
யிருசெவி யின்புறக் கேட்டிவ் வம்மையார்
சென்றவண் முறைமுறை சிலதினந் தங்கிக்
குன்று மகிழ்ச்சி கொண்டு திரும்பினர்.
ஒருமுறை யிவரங் குற்று வதிகையிற்
சுரநோய் தாக்கித் துயருற மஹர்ஷி
யலையா வருபிறப் பனைத்து மாற்ற

மலையா யெழுந்த மருந்தே யென்றுங்
காலனைக் காய்ந்த காலா வென்றுங்
கோலஞா னத்தீக் குன்றே யென்றுந்
தன்னை யடைந்தார் தம்வினை தீர்த்தா
ளன்னே யென்று மன்போ டேத்திநின்
ருள்கதி யாய்வாழ் தாயெவ் பகற்றி
யாள்வதுன் கடனென் றருணை சலேசனை
* வெண்பா நான்கு வேண்டிப் பாடப்
பண்பா ரன்னைநோய் பறந்து போயதே.
இளைய சுதன்மனை யிறந்தபின் பாசத்
தளையை யறுக்கத் தாம்விருப் புற்றே
யருணை மேவி விருபாட் சத்துந்
திருவுறு கந்தாச் சிரமந் தனிலுந்
திரமா யாறு வருடம் வதிந்தன
ரிரமண முனிவரோ டிடைவி டாமலே.
சிலமதி சென்றபின் றேர்ந்து துறவியா
யிளைய சுதனு மீன்றாள் பின்றொடர்ந்
தகமகிழ் வோடே யவர்பணி புரிந்து
மஹர்ஷி தம்மொடு வதித லாயினர்.
அழகம் மாளெனு மன்னை பந்தங்
கழன்று பிறவிக் கடலைக் கடந்து
வருடந் துந்துபி மதிவை காசி
கிருட்டிண பட்சங் கிழமை வெள்ளி
நவமி திதிசேர் சதய நாளி
லவிர்சிவன் பதத்தி லக்கிய மாயினர்.
ஏழு மாத மேகிய பின்ன

* இவ்வெண்பாக்களை இந்நூலிறுதியிற் காண்க.

ளுமொழான் றுளதென் றுலகு தெளிந்திட
வக்கவி னிடமகன் றக்கிரிச் சாரலி
லக்கினி தீர்த்தத் தருகமைந் துளதன்
ஞுயின் சமாதியைச் சார்ந்து வதிகிறார்
தீயவ ரெனினுந் தாயினு மருள்பவர்.
ஆங்கவ் விடத்தோ ராரிரு ணடுநிசி
தீங்குறு திருடர் சிலரறைச் சுவரை
யிடிக்கக் கதவைத் திறப்பித் திவர்நீ
ரெடுத்துப் போமி னிச்சித் தனவென்
றிருந்தவர் தம்மோ டேகினர் வெளியில்.
தறுகண் ணாளர் தைரிய மிக்கோ
ரவனுற் றவரை யடித்தது. மன்றி
யவரு ளொருவ னரும்பெரும் பாவி
நடுங்கா துள்ள நம்பிரான் மேலு
மடித்தனன் கோல்கொண் டடலுட னேரடி.
அடித்த வடிபொறுத் தடிகள் முனியா
தடித்தது போதா தெனிலினு மடிக்கவென்
றருளொடு தாழ்ந்தன ரடித்தில னோர்பா
லிருமென வுரைசெய் தெய்தின ரறையுள்.
புகுந்தவர் கண்டிலர் புன்விலைப் பண்டமு
மஹர்ஷி தம்மை வழிபடச் சென்றவோர்
பெரியவர் கைப்பொருள் சிறிதல தொன்றுமப்
பொருளொடு போயினர் புரையோர் தம்மிடம்.
தடையொன் றியற்றுத் தயாநிதி மேனிமே
லடித்தவன் கருத்தென் னாந்தோ வறிகிலேன்.
அறிஞர் மறத்தை யருளினால் வெல்வரென்
மறைமொழி மெய்யென மாநிலங் கண்டதே.

19-ம பக்கம் 22-23 வரிகட் கிடையில் அடியிற் கண்ட
80 வரிகளையுஞ் சேர்க்க.

துறவறம் பூண்டபின் றூய தம்பியாரா
நிரஞ்சனா னந்தரென் னின்மல நாமந்
தரித்தன ரிவரே சர்வாதி காரியா
யிரமணாச் சிரமத் தெக்கா ரியங்களு
மரிய திறனுட னடிகட் கடங்கிக்
குறைவற நடத்துங் கொள்கை பூண்டுளார்
அன்பர் மஹரிஷிக் களிபொருள் வாங்கி
யனைவாக் குரியவை யாற்ற லொடுதின
மதிதி யாதுலர்க் கன்ன மளித்த
லிசமுறக் கோசக ளிரக்ஷணை புரித
லாலய பூசைக காவன வளித்தல்
சோலை தோயத் தூரிலை போற்றல்
வருடந் தொறுவரு மார்கழிப் புனர்வசு
விரண்டா மதியுறு கிருட்டின நவமி
யென்னுமிவ் விரண்டு புண்ணிய தினத்து
மன்னதா னமபல் லாயிரர்க் களித்த
லாதிநல் லறங்க ளார்வமோ டியற்றி
யேதமில் கணக்கு மெழுதி வருகிறார்.
இப்படி நடக்க விவர்தம் மேலு
மொப்புயர் வில்லா வுரவோர் மேலுந்
தப்பு வழக்குகள் தலம்பொருள் பற்றி
யொப்பி யுளமோர் பூர்வ.ஆழியர்
தொடர்ந்து துணிந்து தொடுத்து நிந்தைகள்
படியிற் பரப்பிப் பலர் மனங் கெடுக்கிறார்.
கலையிலா விவர்சொல் கற்பனைக் கதைகளை

நிலையறி வுடைய நேயர் கேண்மின்.
ஐய ரண்ணா மலையை யடைந்து
பையப பதினா றாண்டகன் றதன்பினே
தாமோர் ஈடறுஞ் சாந்த தாக
தானே பகர்ந்த தகவிலி தனதோ
ரருமபெறு முயற்சியா லொப்புக முடைந்தா
வறைகிறு ரிக்கதை யருந்தவர் மகிமை
யறிந்தவர் நமபா ரணுவள வெனினு
மருங்கலை நீதிக் கதிபதி யொருவ
ராயா ததனை நமபின ரென்னே !
தேயத் தளோர்மனந் திரிதல் விந்தையோ ?
நிந்தை சொலுமிவர் நெருங்கு முன்னரே
யாதனை ரருமபுக ழனைக வருடமாய்ப
பொலிந்தது சிரியா பூமபதம் போற்றினா
கலைஞர் கரைந்து கான்மலர்த் தொழுதனர் ,
மடாதி பதிகள மலர்பபதம் வணங்கினா ;
கெடாத செல்வர் கீழ்வீழ்ந் திறைஞசினா ;
உத்தியோ கஸ்த ருவப்புடன் றுதித்தனர் ;
பக்தர் பணிந்துபா மாலை சூட்டினர் ,
ஆங்கிலர் தமிழ்ச்சில வறிஞர் பரவித்
தீங்கறு செந்நெறி தெரிந்து போயினர்.
பிரமா னந்தம் பிறங்கு முகமு
மருட்கட லென்ன வவிர்தரு நயனமும்
பிரமானு பூதியிற் பிறந்திடு மொழியுந்
தராதரம பாராச் சமத்துவக் கொள்கையு
மிருவகைப் பற்று மிறந்த பொற்பு
மருணை வாசமு மையர் பெரும்புகழ்
பாரினிற் பரவப் பண்ணின வென்றே

யோரின் யாரு முணர்த லெளிதே.
அரிய முத்தர்க் களித்திடு தானமே
யுரிய தான மெவற்றினு முயர்ந்த
வுத்தம தானமென் றுயர்முனிக் குதவிய
வொத்தமுங் கட்டிட மாதியா யுள்ள
விரமஞை சிரமத் தெல்லாப் பொருளுந்
தருமமு மெயமாத் தன்னையே நம்பி
தரணி மாந்தர் தந்தவை யென்றுந்
தருமந் நடத்திச் தான்வரு நாளி
லரிய தன்னை யோட்டி விட்டத்
தருமசொத் தனைத்தக் காமப் பரித்தியப
பொய்ப்பபாத் தியம்புகல் புரட்ட ரென்றோர்
பொய்க்கதை புனைந்து புனிதரைப் பழிக்கிறார்
தருமகர்த் தராய்த் தானமும் பெறுமிவர்
புரியா சாங்கின் புன்மைதா னென்னே!
ஆண்டான் மஹரிஷி யவற்கே யடிமை
பூண்டவன் றனெனப் புகன்மொழி பொய்த்தவிவ்
வழிய ருளத்தாதி நினைவிற் குவமை
யாழிரு முலகி லறைத லரிதே
இகலபா ராட்டா திவாபான் மஹரிஷி
யகத்திற் பூண்ட வறநிலை தெரியா
தினைவர் மாட்டு மருள்புரி காட்சியின்
வனப்பினுக் குவமை வரைதலு மரிதே.
அந்தண ரடியா ரறம்புரி மாந்தர்
நந்தலி லன்னிய நாட்டு விவேகிகள்
சிந்தையி லன்பொடு செறிந்து சூழ
விந்துபோ லிவர்வீற் றின்னருள் புரிகிறார்.

காவல் புரிந்தி காரிகணாடி
மூவர்ப் பிடித்தனர் மூவரு நீதிக்
கதிபதி தம்மா லடைந்தனர் தண்டனை
அதிபதி மன்றத் தடிகளை யிழுத்திலர்
இரமணாச் சிரம மென்னுமிவ் விடத்திற்
பரவிடு பத்தர் பற்பலர் கூடி
மண்டப மொன்று மாண்புற வியற்றிக்
கண்டு வணங்கக் காதலுற் றுறுபவ
ரிடையூ றின்றி யிறைஞ்சி யுய்யுமா
றடிகளைப் பிரார்த்தித் ததிலமர் வித்தனர்.
இடுகோட் டிடையீ திருக்கினுஞ் சுற்றிலு
மடியவர் பொழிலொன் றாக்கு கின்றனர்.
பாலி தீர்த்தக் கரையின் பாங்கர்க்
கோலமாய் நிற்குமேற் குறித்த மண்டபம்.
ஓர்பா லக்கினி தீர்த்த முள்ள
தோர்பாற் பாண்டவ தீர்த்த முள்ள
தோர்பான் மற்றோர் பொய்கையு முண்டு.
சார்புறு மன்னையின் சமாதி மேலோர்
சிவாலய முண்டு தினமிரு காலந்
தவாது சங்கரன் பூசை நிகழ்வுறும்.
பற்பல ரன்பொடு பலபணி புரிய
வற்றவ ரவாவை யேற்றருள் புரிகிறார்.
அருணாசலேச னருளினை வியந்திவ
ரருளிச் செய்த வருந்துதி பஞ்சகம்
ஆர்வ மிகும க்ஷரமண மாலை
வாரொளி சேர்நவ மணிமாலை யோடு
பத்திப் பெருக்குப் பயின்ற பதிகந்

தத்துவ விளக்கந் தருமட் டகமுடன்
பத்தி யோகம் பரஞான மென்னும்
முத்தி மார்க்க மூன்றையுஞ் சுருக்கி
மன்னிரு தொல்சீர் வடதென் மொழிகளிற்
பன்னரு ஞானசல பஞ்சரத் தினமிவை
யினிது விளக்கு மிவர்தாம் பெற்ற
வனுபூ தியின தழிவில் சிறப்பை.
அவாவினை யகற்று மாற்றினை யுணர்த்தும்
விவேக சூடா மணியென விரிநூ
லரிய வுத்தம வதிகா ரிக்கொளிர்
திருக்கு திருசிய விவேக நூலையு
மத்தா மலக வான்ம தோத்திரஞ்
சித்சுக விளக்கஞ் செய்குரு துதியுந்
தேவ னுமைக்குத் திருவாய் மலர்ந்த
தேவிகா லோத்தரத் திருவா கமத்தில்
ஞான சார நவில்பட லத்தையுந்
தேனார் தமிழிற் றெள்ளிய நடையில்
வாசக மாகவும் விருத்த மற்று
மாசில் வெண்பா வாகவு மருளினார்.
புங்கவர் போற்றுந் தக்ஷிணா மூர்த்திமேற்
சங்கரா சாரியார் சாற்றி யருளிய
தோத்திர மறுசீர் விருத்தமாத் தூத்தமிழ்
சேர்த்தனர் கருத்துடன் சிட்டர் களித்திட.
கன்மத் தியல்புங் கடவுள் சீவ
ரென்பவ ரியல்பு மெழினுற விளக்கித்
தென்மொழி வடமொழி தெலுங்கு கேரள
மென்னுநற் பாடைக ளீரிரண் டினுமோர்

ஞான நூலு நவின்றருள்செய்தன
ரூனமி லதன்பெய ருபதேச சாரமே.
உள்ளதோர் முதலே யுரைத்தன் மும்முதல்
கள்ள வகந்தை யுள்ள மட்டே
யென்றுநன் கிலக்கி யுள்ளது நாற்ப
தென்றொரு நூலு மியம்பி யருளினூர்.

21-வது பக்கம் 6-7வரிகட் கிடையில் அடியிற்கண்ட
6-வரிகளையுஞ் சேர்க்க

சர்வ ஞானோத் தரவா கமத்திற்
சர்வமுந் தானுய்க் தன்மய மன்னச்
சூட்சி குகற்குச் சொல்லு மான்ம
சாட்சாத் காரத் தகுபிர கரணமுந்
தமிழ்வெண் பாவாற் சாற்றி யருளினர்
முமூட்சுக் கன்மன மோகந் தீரவே.

சரித அகவல் முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

அனுக்கிரகம்.

அகவல்.

இரமண மஹர்ஷி யெனும்பெயர் போற்றி ;
இரமிக்கச் செயுநின் னெழிலுரு போற்றி ;
இரமிய மாநின் னின்மொழி போற்றி ;
இரமிய மமர்நின் னிதச்செயல் போற்றி ;
அஞ்ச லெனுநின் னருள்விழி போற்றி ;
விஞ்சு வினைசுடு வேல்விழி போற்றி ;
தப்பு வழிகளிற் றவித்திடு மனதின்
வெப்ப மொழிக்கும் வெல்கழல் போற்றி ;
சித்தஞ் சலித்துச் சோர்ந்திடு சீவர்
பத்தி யில்லாப் பாவிக ளாயினுஞ்
சிசுத்துயர் கண்டு தேற்றுந் தாய்போற்
கசிந்து கருணை கண்ணிற் றதும்ப
வின்சொற் சொல்லி யேங்கு மனதை
மன்ற தேற்று மன்ன போற்றி ;
அன்னையு மத்தனு மாகி யடைவோர்க்
கன்ன மளித்து மறிவைப் பெருக்கியு
மின்ன லொழிக்கு மிறைவ போற்றி ;
அன்பே யுருவா யமர்ந்தாய் போற்றி ;
மக்கண் மழலை மகிழ்ந்து கேட்குந்
தக்க வன்புள தந்தை தாய்போற்
கல்வி யில்லேன் கழறு மொழியிற்
பல்வகைப் பட்ட பிழைக ளுளவென்

றுருவருப் புரும லைய நீகேட
டருள்செய் வாயென் றகந்துணி கின்றேன்.
கடையே னுங்கிலக் கலாசா லையினிற்
படித்த பொழுதென் மடமை யுளத்தி
லுதித்த தோர்வினு வுழனு னுரென
இதற்கு விடையினை யினிய நூல்களிற்
றேடிப் பார்த்துந் தெரிந்த நின்னை
நாடிக் கேட்டும் நாயேன் சித்த
மசுத்த மிகுதியா லாழ்ந்தறி யாமற்
பசுபதி யருளைப் பற்றவெண் ணுமற்
கண்ட வழிகளிற் களித்துத் திரிகையிற்
பண்டை வினையாற் பலதுய ரெய்தி
யறிவு கலங்கிநின் னருள்பெற் றுய்யக்
கருதிநின் னடைதலுங் கனிந்த மொழிகளா
னெனுஞ் சொல்லி னல்லர்த் தமதா
யூனுட லிதனு ளுற்றும் வேருய்
நாச மிலதாய் ஞான மயமாய்
மாசுக மாயோர் வத்து வுளதா
மப்பர வத்துவை யறிந்திட வேண்டி
னப்பொரு ளல்லா வாகந் தனைநா
னுகக் கருது மபிமா னத்தை
யேகச் செய்துபின் யானு ரென்று
விசாரிப் பதுவே மேல்வழி யென்றும்
விசாரிக் குங்கால் வெளியிற் கிளம்பி
வாதனை யளவில வந்து தடுக்கினும்
பீதி யுருமற் பீடுள சூரன்
கோட்டை யொன்றைக் கொள்ளக் கருதிற்

கோட்டையி லிருந்து குதித்தெழு பகைவரை
வரவர விடாமல் வாளான் மடித்தவ்
வரும்படை யெறிந்தவ் வரணிற் புகல்போ
லிறையள வேனு மெழுந்திடு நினைவை
நிறைவேற் றற்கு நேசியா தஃது
தோன்றுவ தார்க்கெனிற் றேன்று மெனக்கென
நான்யா ரெனின நினைவு நாசமா
மெழுவெழு நினைவுக ளெல்லா மிவ்வண
மழித்திடின் முடிவிலவ் வகமெனு நினைவு
மொழிந்திடுந் தானெனு முயர்வொப் பில்லா
விழுப்பொரு ளொன்றுமே விளங்கிடு மென்றுங்
கடலி னடியிற் கிடக்கு முத்தை
யடைய வேண்டி யதனுட் புகுவோன்
றன்னைத் தடநீர் தடுத்து வெளியி
லின்னன் மிகச்செய் தெழுப்பி விடினு
மடுத்தடுத் தாழ்ந்தாழ்ந் ததனுண் மூழ்கி
யெடுப்பது போல வெழின்முத் ததனைத்
தன்னை யாரெனத் தான்றே டுங்கா
லன்னிய நினைவுக ளனேக கோடி
தடுத்தீர்த் துலகிற் றள்ளுந் தனினும்
பிடித்ததைப் பின்விடாப் பேதை போல
மூழ்கி மூழ்கி மூழ்கித் தன்னு
ளாழ்ந்திடிற் றன்னை யறியலா மென்று
மந்த வறிவே யரியவீ டென்றுஞ்
சிந்தையிற் பதித்தருள் செய்தனை யன்றியு
மடியேன் கரண மனைத்துநின் சத்தியா
லொடுங்கப் பண்ணி யுணர்வே யுருவாய்க்

காய மிதனுட் கலந்த வென்னை
யாயும் வழியையு மறிவித் தருளினை.
உன்ற னுண்மை யுபதே சப்படி
நின்றனுட் டிக்க நேயமாய் முயற்சி
செய்யுங் காலை சேயிழை யார்மேல்
வெய்ய காமமென் மனதில் விளைந்தே
யலக்கண் மிகச்செய வாற்றவொண் ணுமற்
கலியா ணஞ்செயக் கருத்தி லுன்னிப்
பொருட்குறை வாலே புத்தி கலங்கிக்
கருதினேன் றுயர்க்கரை காண்வழி யாதென.
சாக்கிர மென்றுஞ் சார்கன வென்றுந்
தூக்க மென்றுஞ் சொல்லப் பட்ட
வவத்தைக ளொழிய வனுபவம் வேறிலை;
இவற்று ளுலகமுன் னிரண்டிற் றோன்றும்.
உலக மென்பதை யுற்றுப் பார்க்கையிற்
புலன்க ளைந்தும் புலன்களி னினைவுமா
யின்பமுந் துன்பமு மிவற்றி னினைவுமாய்த்
துன்னித் தோன்றுந் தோற்றங் களைத்தவிர்த்
தில்லைவே றென்பதற் கின்றைய மெனினு
மல்லலை யொழிக்கு மாற்றலோ வெனக்கிலை.
அறிவு ஞாபக மன்றி யென்னிடம்
பிறிதொரு சத்தியுந் தெரிதர வில்லை.
பொறிக ளுணர்த்திய பொருள்கள் பின்னர்ப்
பொறிக டமக்குப் புலனு காமன்
மனதின் மட்டில் விளங்கமுன் பொறிகளா
லனுபவித் ததாக வறிவில் விளங்கலு
மனதிற் கண்டவை மறைந்துபின் னெழமுன்

மனதில் வந்ததா விளங்கலு மறிவில்
ஞாபக மென்று நவிலப் படுமாம்;
ஞாப கம்மே நசையும் வெறுப்புமாம்.
சகமுஞ் சடலமென் சிருட்டிக ளல்ல;
சகத்தையு முடலையுஞ் சிருட்டித் தவரார்?
படைப்பவ ரின்றிப் பார்முத லாய
சடப்பொரு டாமே தோன்று மென்னி
னியம மிலாதவை நிகழ்ந்திட வேண்டும்.
நியமங் காண்டலி னியமிப் பவனு
மியற்கை யறிவு மெல்லையி லுலகைப்
பயந்தளித் தழிக்கும் பரமாஞ் சத்தியு
முளனு மொருவித வுத்தே சத்துட
னளவி லுயிரை யாகத் தோடு
கூட்டியும் பிரித்துங் காட்டியு மறைத்து
மாட்டு பவனு மருளார்ந் தவனு
மிறைவ னொருவ னிருக்க வேண்டுங்
குறைகளை யவனிடங் கூறுது மென்று
கருதி முடித்துக் கடவுளே கருத்தனே
யரனே யருளே யண்ணலே யுனையலாற்
சரண்வே றில்லை தமியேன் செய்துள
வரிய பிழைபொறுத் தடியிற் கண்ட
பிரசினங் களுக்குப் பதிலிராப் பிரியுமுன்
வரைந்திட் டேனும் வரைவினுக் கீழல
தரிய காட்சிதந் தறைந்திட் டேனு
மருள்க வென்று மருள்வா யென்னி
லொழுகக் கடவே னுறுதியா யவ்வழி
கழறு மென்னிற் கருணா கரனுய்ப்

பராபர னருணைப் பதியி லிருக்கும்
பிராமண சுவாமிகள் பெருமதி யொன்றே
திரமாய்த் தேரத் தக்க தாகையாற்
றெரிந்தவா சிறிதுந் தவறு தொழுகக்
கடவே னென்றுங் கழறிய வினைவயெலா
முடிவா யெழுதியம் முழுவிண் ணப்ப
மத்தி முகவ னுலய மொன்றில்
வைத்தனன் வரைந்த விருக்க ளவையெனிற்
றுன்பம் யாதுந் தொடரா தகற்றற்
கென்செய வேண்டுநா னிச்சகத் தென்றுங்
கருத்திற் குறித்தவோர் கன்னி தன்னை
யறிவிலேன் மணஞ்செய லாமோ வென்று
மாகா தெனிலே னுகா தென்று
மாகு மென்னி லதற்கு வேண்டுந்
திரவிய மெப்படித் தேடுவ தென்று
முரைத்த வினையே யொருவிதத் தேனு
மதற்கோர் விடையு மடைந்தில னதனு
லுதவுவாய் நீயென் றுன்பத நணுகி
யாண்டு சின்னு ளடியேன் காத்தும்
வேண்டா தொன்றும் விரிமன மடக்கித்
தன்னை யாய்ந்து தானிருப் பதுவே
நன்மை யடையு நல்வழி யென்று
நடந்து காட்டி நிலையி னுட்டுனைத்
தொடர்ந்து பொருளுந் தோகையுங் கிடைக்கும்
வழியைக் கேட்பது வழுவென வெண்ணி
மொழியா தென்குறை மோனமாய்த் திரும்ப
வெண்ணி யிருக்கையி லெந்தா யொருநா

ணண்ணிய பலபேர் நடுவி னீயுற்
றென்னை யருகி லிருக்கச் செய்தபி
னுன்னைச் சுற்றி யொள்ளொளி வீசக்
கனக மயமாக் காணுமோர் குழந்தை
யுனதெழி லமைந்த வுச்சியி லிருந்து
வெளிவர மீண்டு மறைந்த ததனுளே.
எளியேற் கிவ்வண மிரண்டு மூன்று
தடவைகள் காட்சி தந்தருள் புரிந்தனை.
கடவு ளுளனெனக் கருத்திற் றேறி
யடங்கா மகிழ்வுகொண் டழுது விம்மி
யுடனுள வடியரோ டுரைத்திட வதனைக்
கண்டவ ருண்ட கஞ்சாக் குணமென
விண்டனர் பற்பல விகட வார்த்தைகள்.
மறுநாண் மாலை மறையோய் நின்முன்
னறிவிலே னிருந்தி டமயத் தருளிய
*காட்சியைக் கழறக் கடையனும் வலனோ ?
மாட்சிமை யுளமுழு மதியம் பலசேர்ந்
தொருங்கு வீசு மொளியைப் போலுனை
நெருங்கிய விடமெலா நிகரிலாச் சோதி
சூழ்ந்திடக் கண்டேன் சுடர்விடு பொன்னைத்
தாழ்ந்திடச் செய்யுந் தினகரன் றனதொளி
விளங்கிய துன்றிரு மேனி யெல்லாம் ;
நளினக் கண்க ணல்லருள் சொரிந்தன ;
இறைவர்க் கிறைவன திருங்கெம் பீரமுங்
குறைவறக் கொடுக்குங் குணமும் விளங்கின.

---

* இது நிகழ்ந்தது ப்ரமாதீச வருஷம் சித்திரை மாதம் இருபத்து மூன்றாந் தேதி. (5-5-1913.)

துறைந்து பின்னர்த் தூவெண் ணீற்றொளி
கதிர்விடு நினது காய மெங்கும்
விளங்கிடக் கண்டேன் வினையேன் கன்னிக
ருளமு நீரா யுருகிக் கரைந்தது.
கண்ணுற் காட்சிகள் கண்ட துண்டுநா
ணண்மையி லிருந்தோ ரவைகண் டிலராம்.
வாயை மலர்த்திநான் வினவவு மில்லை ;
வாயை மலர்த்திநீ விள்ளவு மில்லை.
இதன்பின் னடுத்த விரண்டாந் தினத்திற்
சுதையுரு வாம்ஓம் சுப்ர மண்யமென்
றுன்சன் னிதியி லுச்சரித் திருக்கையி
லுன்றிரு மேனி யுயர்பளிங் கைப்போற்
கனவொளி வீசக் கண்டின் பெய்தி
யனைய சுகமொழித் தலைதற் கஞ்சினேன்.
சோதி மயமாத் தோற்றம் பலதரம்
பேதுறு காலை பெரிது முவந்து
நனவிலுங் கனவிலு நல்கினை யெநதாய்.
உனது பேரரு ளுரைக்கற் பாற்றோ ?
காமம் வெகுளி கட்புலால் பொய்யெனு
நாம முற்று நல்லோர் நடுங்குஞ்
சகல பாவமுஞ் சார்ந்த பாவி ;
சகல விதத்துஞ் சையெனத் தக்கவன் ;
பின்னும் பின்னும் பிழையிற் பயிலா
தென்னை யடக்கி யெழிலா
ருன்பதம் பற்றியா னுய்ந்திட வருள்கவே.

அனுக்கிரக அகவல் முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ

ரமணபாதமாலை.

வாழ்த்து.

காப்பு.

குருமணி ரமணன் றிருவடி வாழ்த்தக்,
கரிமுக கணபதி கழலிணை தொழுவாம்.

நூல்.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
ரமணன் பாதம் வாழ்கவே ;
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வென்றும் வாழ்கவே.

1. அருளே யுருவ மாகி வந்த
வாசான் பாதம் வாழ்கவே ;
மருளை நீக்கித் தெருள ளிக்கு
மறையோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

2. காண்போர் மனதைக் கவர்ந்து கொள்ளுங்
கடவுள் பாதம் வாழ்கவே ;
வேண்டல் வெறுத்த லிரண்டு மில்லா
விமலன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

3. சோதி மயமாக் காட்சி யருளுஞ்
சுவாமி பாதம் வாழ்கவே ;
ஆதி பகவ னருளைப் பெற்ற
வன்பன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

4. மெய்யு ணர்ந்து முற்று நீத்த
மெய்யன் பாதம் வாழ்கவே ;
உய்யும் வழியை யுளவா றுணர்த்து
முரவோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

5. அறிந்து மறிந்தோ ருகக் காட்டா
வறிஞன் பாதம் வாழ்கவே ;
சிறந்த பத்தி நெறியு ணர்த்துஞ்
செம்மல் பாதம் வாழ்கவே. (வாழ்க)

6. அஞ்சி யடைவோர்க் கபய மருளு
மண்ணல் பாதம் வாழ்கவே ;
நஞ்சு மமுத மாகக் கொள்ளு
நாதன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

7. பாப மெல்லாம் போக்க டிக்கும்
பரமன் பாதம் வாழ்கவே ;
ஆபத் தொன்று மணுக வொட்டா
வப்பன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

8. இன்னா செயினு மினிய செய்யு
மிறைவன் பாதம் வாழ்கவே ;
கன்னோர் நெஞ்சுங் கனியச் செய்யுங்
கர்த்தன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

9. வான்போற் கைம்மா றொன்றும் வேண்டா
வள்ளல் பாதம் வாழ்கவே ;
தேன்போ லினிக்குந் திருவாக் குள்ள
தேவன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

10. நானு ரெனப்பா ரனியம் விடென்று
நவில்வோன் பாதம் வாழ்கவே ;
தானய் விட்டாற் றுயர்போ மென்னுஞ்
சாந்தன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

11. ஆசை யுடனு னலனென் ஞான
மளிப்போன் பாதம் வாழ்கவே ;
ஈசன் மேலெச் சுமையும் போடென்
றிசைப்போன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

12. எப்பா ரத்தையு மேற்கு மிறையென்
றிறுப்போன் பாதம் வாழ்கவே ;
செப்பிய வழியி னின்றி டென்னுஞ்
சீரோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

13. கடவுட் செயலுரு வெல்லா மென்று
கதிப்போன் பாதம் வாழ்கவே ;
கெடுப்ப தகமே வெறல வென்று
கிளப்போன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

14. நானென் றெழுமே தனுமன மென்று
நவில்வோன் பாதம் வாழ்கவே ;
ஞான திருட்டி யதன்லய மென்று
நடிப்போன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

15. ஒன்று நினையா திருசும் மாவென்
றுரைப்போன் பாதம் வாழ்கவே ;
என்று முளத்தை யிருத்துன் னிடத்தென்
றிசைப்போன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

16. ஆன்ம விசார மயர்ந்து விடேலென்
றறைவோன் பாதம் வாழ்கவே;
ஆன்ம சொரூப மடையும் வரையென்
றருள்வோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

17. ஊனோ டுற்ற வுறவொ ழியுமென்
றுரைப்போன் பாதம் வாழ்கவே;
நானு ரென்வி சாரத் தாலென்
னல்லோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

18. ஆனந் தந்தான் மேன்மே லெழுமென்
றறைவோன் பாதம் வாழ்கவே;
நானுள் ளழுந்த வழுந்த வென்னு
நம்பி பாதம வாழ்கவே. (வாழ்க)

19. இறைவற் கலையு மனதை யீயென்
றிசைபபோன் பாதம வாழ்கவே;
பெரிய பத்தி யதுவே யென்னும்
பிரியன் பாதம வாழ்கவே. (வாழ்க)

20. உன்னு ளுளவீ சனைவி டேலென்
றுரைபபோன் பாதம் வாழ்கவே;
அன்னி யமபோல் வரினும் வெளியென்
றறைவோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

21. தாவி னயலிற் றடுமன தென்னுந்
தலைவன் பாதம் வாழ்கவே;
ஆவியை யீசற் களித்த லதுவென்
றருள்வோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

22. எழும்பு நினைவுக ளெல்லா நசுக்கென்
றிசைபபோன் பாதம வாழ்கவே ;
வழுத்து வைராக் கியமது வென்று
விரிபபோன் பாதம வாழ்கவே. (வாழ்க)

23. மனம டக்கும வழிபல வென்று
மொழிவோன் பாதம் வாழ்கவே ;
அனைத்தின் மேல்வி சார மாமென்
றறைவோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

24. வேறு வழியி லடக்கின் மீறு
மென்போன் பாதம வாழ்கவே ;
ஏறு வாச னையினால் வெளியென்
றிசைப்போன் பாதம வாழ்கவே. (வாழ்க)

25. செபிக்கின் மந்த்ரஞ் சித்த மொடுங்கு
மென்போன் பாதம் வாழ்கவே ;
செபம்வி சார சாதன மென்னுஞ்
சித்தன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

26. மூர்த்த மனதை யொருமை செயுமென்
மூர்த்தி பாதம் வாழ்கவே ;
ஓர்த்தி டதுவுஞ் சாதன மாமென்
றுரைப்போன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

27. பிராண னொடுங்கிற் பிரஞ்ஞை யொடுங்கு
மென்போன் பாதம் வாழ்கவே ;
பிராணா யாமஞ் சாதன மென்னும்
பெரியோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

28\. சருவ நியமந் தமின்மித வூண்மே
லென்போன் பாதம் வாழ்கவே ;
ஒருசொற் பேசிற் பெருகும் பலவென்
றுரைபபோன் பாதம வாழ்கவே. (வாழ்க)

29\. ஏகநூற் கருத்து மனம டக்க
லென்போன் பாதம வாழ்கவே ;
உன்னைக் காண வோர நூ லேனென்
றுரைபபோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

30\. ஆசை யாதி யணுக்கள் செயலென்
றருள்வோன் பாதம் வாழ்கவே ;
ஆசை யறலே ஞான மென்னு
மடிகள் பாதம வாழ்கவே. (வாழ்க)

31\. பெண்ணாண் பேதம போக்கி டென்று
பகாவோன் பாதம் வாழ்கவே ;
மன்ற லதற்கு வழியா மென்னு
முத்தன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

32\. பிறருக் கீவ தமக்கா மென்னும்
பெருமான் பாதம் வாழ்கவே ;
அறியி னீயார் யார்கோ லென்னு
மருளோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

33\. தாழத் தாழ நலமிகு மென்று
தாழ்வோன் பாதம் வாழ்கவே ;
கீழோர் பாலுங் கெடுவெ றுப்பென்
குகன்றன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

34. நாமெ ழிற்பிற ரெழுவ ரென்று
நவில்வோன் பாதம் வாழ்கவே;
நாம டங்கி லடங்குவ ரென்னு
நண்பன் பாதம வாழ்கவே. (வாழ்க)

35. சொன்ன சொற்றவ றுதே யென்று
சொல்வோன் பாதம வாழ்கவே;
அன்யர் கார்யத் தகன்றிரு வென்னு
மாப்தன் பாதம் வாழ்கவே (வாழ்க)

36. தாமே யேறப் பழக்க னலமென்
றயவன் பாதம் வாழ்கவே;
நாமேற் றாக்கி விடலி னென்னு
நயவன் பாதம் வாழ்கவே (வாழ்க)

37. ஆசா ரமவிட லனர்தத மாமென்
றறைவோன் பாதம வாழ்கவே;
யோசித் தவற்றின் பொருள்கொ ளென்னும்
யோகி பாதம வாழ்கவே (வாழ்க)

38. எதையு மீச னுளென் றியற்றென்
றிசைப்போன் பாதம் வாழ்கவே;
மதித்தி டுலகோர் கனவா யென்னு
மௌனி பாதம வாழ்கவே. (வாழ்க)

39. பதிசொற் கேட்டல் சதிக்கழ கென்று
பகர்வோன் பாதம் வாழ்கவே;
பதிபோற் சாந்தம் சதியுறு வாளென்
பகவன் பாதம வாழ்கவே. (வாழ்க)

40\. பதித்தி டான்மா வின்மன தென்று
பணிப்போன் பாதம் வாழ்கவே ;
அதுதான் குருசொற் போற்ற லறியென்
றருள்வோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

41\. ஈதல் வேண்டா மெதுவு மெமகென்
றிசைப்போன் பாதம் வாழ்கவே ;
பேத நீங்கிற் போது மென்று
புகல்வோன் பாதம வாழ்கவே. (வாழ்க)

42\. மரியா தைதான் வெளிக்கா மென்று
வகுபபோன் பாதம் வாழ்கவே ;
அரிவை புருடர்க் கமளியி லேதென்
றறைவோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

43\. குற்றஞ் செயினுங் குணமாக் கொள்ளுங்
குரவன் பாதம வாழ்கவே ;
நற்றவ மில்லா நாயேன் றனையாள்
ஞானி பாதம வாழ்கவே. (வாழ்க)

44\. இனன்போ லன்ப ரிதய மலர்த்து
மினியோன் பாதம் வாழ்கவே ;
அணியா ரருணை சலத்தில் வாழு
மமலன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

45\. திருச்சுழி யென்னுந் தலத்து தித்த
செல்வன் பாதம் வாழ்கவே ;
அருளார் சுந்தர மையர் பெற்ற
வழகன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
ரமணன் பாதம் வாழ்கவே ;
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வென்றும் வாழ்கவே.

ஸ்ரீ ரமண பாதமாலை ஸம்பூர்ணம்.

உன்பெருமை யுணராதே
னுரைத்தேனுன் சரிதையினை.
யன்னதனி லுளகுறைக
ளவையெல்லாம் பொறுத்தருளி
யென்மனதி லதன்சார
மெப்போதுங் குடிகொள்ள
வன்னையே யநுக்கிரகம்
புரிரமண சற்குருவே.

ஸ்ரீ ரமண சரிதம் ஸம்பூர்ணம்.

சிவம்.

உ

இந்நூலின் 4-ம் பக்கத்திற் குறிப்பிடப் பெற்ற பாட்டும் பதிகமும்.

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

திருச்சிற்றம்பலக் கோவையார்.

அன்புடை நெஞ்சத் திவள்பே துறவம் பலத்தடியா
ரென்பிடை வந்தமிழ் தூறநின் றாடி யிருஞ்சுழியற்
றன்பெடை நையத் தகவழிந் தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பிலனே

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகம்.

திருச்சுழியல்.

பண் : நட்டராகம்.

1. ஊனாயுயிர் புகலாயக லிடமாய்முகில் பொழியும்
வானாய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
றேனாதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழிய
னானாவித நினைவார்தமை நலியார்நமன் றமரே.

2. தண்டேர்மழுப் படையான்மழ விடையானெழு கடனஞ்
சுண்டேபுர மெரியச்சிலை வளைத்தானிமை யவர்க்காத்
திண்டேர்மிசை நின்றானவ னுறையுந்திருச் சுழியற்
றொண்டேசெய வல்லாரவர் நல்லார்துய ரிலரே.

3. கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியற்
றெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவா
ரவ்வத்திசைக் கரசாகுவ ரலராள்பிரி யாளே

4. மலையான்மகள் மடமாதிட மாகத்தவள் மற்றுக்
கொலையானையி னுரிபோர்த்தவெம பெருமான்றிருச் சுழிய
லலையார்சடை யுடையானடி தொழுவார்பழு துள்ளம்
நிலையார்திகழ் புகழானெடு வானத்துயர் வாரே.

5. உற்றானமக் குயரும்மதிச் சடையான்புல னைந்துஞ்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமங்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்துமது கடனே.

6. மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழிய [ந்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையானினைந்தேத்து
தலந்தாங்கிய புகழான்மிகு தவமாஞ்சது ராமே.

7. சைவத்தசெவ் வுருவன்றிரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையாலரண் மூன்றும்மெரி செய்தான்
றெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்றிருச் சுழியன்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்லெளி தன்றே.

8. பூவேந்திய பீடத்தவன் றானும்மட லரியுங்
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புக லறியா
சேவேந்திய கொடியானவ னுறையுந்திருச் சுழியன்
மாவேந்திய கரத்தானெம சிரத்தான்றன தடியே.

9. கொண்டாடுதல் புரியாவரு தக்கன்பெரு வேள்வி
செண்டாடுதல் புரிந்தான்றிருச் சுழியற்பெரு மானைக்
குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கிய ரறியா
மிண்டாடிய வதுசெய்தது வானாலவரு விதியே.

10. நீரூர்தரு நிமலன்றிரு மலையார்க்கய லருகே
தேரூர்தரு மரக்கன்சிர நெரித்தான்றிருச் சுழியல்
பேரூரென வுறைவானடி பெயர்நாவலர் கோமா
னாரூரன தமிழ்மாலைபத் தறிவார்துய ரிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் திருமேனிநாதர் ; அம்மன்பெயர்
துணைமாலைநாயகி

இந்நூலின் 17-ம் பக்கத்திற் குறிப்பிடப் பெற்ற

வெண்பாக்கள்.

1. அலையா வருபிறவி யத்தனையு மாற்ற
மலையா வெழுந்த மருந்தே—தலைவாநின்
றாள்கதியாய் வாழுமென் றாய்தாப மாற்றியே
யாள்வதுவு முன்கடனே யாம்.

2. காலகா லாவுன் கமல பதஞ்சார்ந்த
பால னெனையீன்றாள் பாலந்தக்—காலன்றான்
வாரா வகையுன்கால் வாரிஜமே காட்டுவா
யாராயிற் காலனுமே யார்.

3. ஞானங்கி யாயோங்கு நல்லருணை வோங்கலை
ஞானங்கி யாலன்னை நல்லுடலை—ஞானங்க
மாகச்செய் துன்பதத்தி லைக்கியமாக் கிக்கொள்வாய்
சாகத்தீ மூட்டுவதேன் சாற்று.

4. மாயா மயக்கமதை மாற்றருணை மாமலையென்
றாயார் மயக்ககற்றத் தாமதமேன்—றாயாகித்
தன்னையடைந் தார்வினையின் றாக்கறுத்தாள் வாருலகி
லுன்னையலா லுண்டோ வுரை.

அநுபந்தம்.

* நானார்?

நானார்? என்னும் விசாரணையே மோக்ஷத்தைக் கொடுக்கும்.

1. நானார்?

ஸப்த தாதுக்களாலாகிய ஸ்தூல தேகம் நானன்று. சப்த ஸ்பரிச ரூப ரச கந்த மென்னும் பஞ்ச விடயங்களையும் தனித்தனியே அறிகின்ற சுரோத்திரம், துவக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வை, கிராண மென்கிற ஞானேந்திரியங்களைந்தும நானன்று. வசனம், கமனம், தானம், மலவிசர்ஜ்ஜனம், ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்ற வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்னும் கன்மேந்திரியங்களைந்தும நானன்று. சுவாஸாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி பஞ்சவாயுக்களும் நானன்று. நினைக்கின்ற மனமும் நானன்று. சர்வ விஷயங்களும் சர்வதொழில்களும் அற்று, விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமும் நானன்று.

2. இவை யெல்லாம் நானல்லாவிடில் பின்னை நானார்?

மேற்சொல்லிய யாவும் நானல்ல, நானல்லவென்று நேதி செய்து நீக்கித் தனித்து நிற்கும் அறிவே நான்.

---

* இது 1902-ம் வருஷம் ஸ்வாமிகளுடன் சம்பாஷணை வாயிலாக சிவப்பிரகாசம் பிள்ளையவர்களால் ரசிக்கப்பட்டது.

3. அறிவின் சொரூபம் என்ன ?

அறிவின் சொரூபம் சச்சிதானந்தம். இதுவே மோனமென்று சொல்லப்படும். இவ்வாத்மா ஒன்றே யுள்ளது. ஜக ஜீவ ஈச்வரர்கள் சிப்பியில் வெள்ளிபோல் அதிற் கற்பனைகள். ஆதலால் சொரூபமே கடவுள்; சொரூபமே நான்; சொரூபமே ஜீவர்கள்; சொரூபமே ஜகம். எல்லாம் சிவஸ்வரூபமே.

4. சொரூப தரிசனம் எப்போது கிடைக்கும்?

திருசியம் நீங்கிய விடத்து திருக்காகிய சொரூப தரிசனம் உண்டாகும்.

5. திருசியம் உள்ளபோதே சொரூபதரிசனம் உண்டா காதா?

உண்டாகாது. திருக்கும் திருசியமும், ரஜ்ஜுவும சர்ப்பமும் போன்றவை. கற்பித சர்ப்ப ஞானம் போகா விடத்து அதிஷ்டான ரஜ்ஜு ஞானம் தோன்றுமா ?

6. திருசியமாகிய ஜகம் எப்போது நீங்கும்?

சர்வ அறிவுக்கும் சர்வ தொழிற்கும் காரணமாகிய மனமடங்கினால் ஜகம் மறையும்.

7. மனதின் சொரூபம் என்ன ?

நினைவே மனதின் சொரூபம். அது ஓர் சக்தி. அது சகலபொருள்களுமாய் விரிந்திருக்கும். அது தன்னுள் அதாவது சொரூபத்தில் லயமாகும்போது சொரூபம் தோன்றும்; வெளிப்படும்போது ஜகம் தோன்றும். ஆகையால், ஜகம் தோன்றும்பொழுது சொரூபம் தோன்றாது.

8. மனம் எப்படி யடங்கும்?

நானாரென்ற விசாரணையாலேயே மனமடங்கும். நானாரென்ற நினைவானது மற்ற நினைவுகளெல்லாவற்றை மழித்து முடிவில் பிணஞ்சுடுதடிபோலத் தானுமழியும. பிறகு சொரூப தரிசன முண்டாம் நானென்ற நினைவு அடங்குமபோது மூச்சுமடங்கும அகங்காரம எங்கிருந்து உற்பத்தியோ அங்கிருநதுதான் மூசசு முற்பததியாகிறது. எதைச செய்தாலும நான் என்கிற அகங்கார மற்றுச் செய்யவேண்டும அப்படிச செய்தால் தன் மனைவியும் ஜகதீசவரியைபபோலத தோன்றுவாள் எவன் தன்னையே கடவுளாகிய சொரூபததினிடத்தில் தியாகம் செய்கிறானோ அவனே பக்திமான்

9. மனமடங்குவதற்கு வேறே உபாயங்க ளில்லையா?

விசாரணையைத் தவிர வேறே தகுநத உபாயங்க ளில்லை. மற்ற உபாயங்களினா லடக்கினால் மனம் அடங்கினாற்போலிருந்து மறுபடியும கிளமபிவிடும.

10 விஷய வாசனைகள் அளவற்றனவாய்க் கடலில் அலைகள்போலத தோன்றுகின்றனவே அவைகள் எல்லா மெபபோது நீங்கும்?

சொரூபத்தியானம் கிளமபக்கிளமப வாசனைகளெல்லா மடங்கிவிடும்

11. தொன்றுதொட்டுவருகிற சகல விஷய வாசனைகளும் நீங்கி சொரூபமாத்திரமா யிருக்க முடியுமா?

முடியுமா முடியாதா வென்கிற சந்தேக நினைவுக்கு மிடங்கொடாமல் சொரூபத்தியானத்தை ஒரே பிடியாகப் பிடிக்கவேண்டும். இங்ஙனம மனதின் சொரூபத்தை விசாரித்துக்கொண்டேபோனால் மனம் தானாக முடியும்.

12. இவ்விசாரம் எதுவரை வேண்டும்?

மனதில் எதுவரையில் விஷயவாசனைகள் இருக்கின்றனவோ அதுவரையில் நானாரென்கிற விசாரணையும் வேண்டும். கோட்டையில் எதிரிகள் உள்ளவரையில் வெளியில் வந்துகொண்டே யிருப்பார்கள். வரவர அவர்களை வெட்டிக்கொண்டே யிருந்தால் கோட்டை கைவசப்படும். அதுபோல நினைவுகள் தோன்றத தோன்ற அப போதைக்கப்போதே விசாரஞானத்தால் அவைகளை நசிப்பிக்கவேண்டும். உற்பத்தியாகும் நினைவுகளை யெல்லாம் ஒன்றுகூட விடாமல் அவற்றின் உற்பத்தி ஸ்தானத்திலேயே நசுக்கிப்போடுதலே வைராக்கியமாகும் சொரூபத்தை யடைகிறவரையில் விசாரணையை விடக்கூடாது.

13. இவையாவும் ஈச்வர சங்கற்பமன்றோ?

இச்சாசங்கற்ப யத்தனமின்றி எழுந்த ஆதித்தன் சந்நிதி மாத்திரத்தால் காநதக்கல் அக்கினியைக் கக்குதலும், தாமரையலர்தலும், நீர் வற்றுதலும், உலகோர் தத்தம் காரியங்களில் பிரவிருத்தித்து இயற்றி யடங்குதலும், காந்தத்தின்முன் ஊசி சேஷ்டித்தலும்போல சங்கற்ப ரஹிதராயிருக்கும் ஈச்வரசந்நிதான விசேஷமாத்திரத்தால் நடக்கும் முத்தொழில் அல்லது பஞ்ச கிருத்தியங்கட்குட்பட்ட ஜீவர்கள் தத்தம் கர்மாநுசாரம் சேஷ்டித் தடங்குகின்றன ரன்றி அவர்சங்கற்ப ஸஹிதருமல்லர்; ஒரு கருமமும் அவரை யொட்டாது. அது உலக கர்மங்கள் சூரியனை யொட்டாததும், ஏனைய சதுர் பூதங்களின் குணகுணங்கள் வியாபகமான ஆகாசத்தை ஒட்டாததும் போலும்.

ஸ்ரீ ரமணாச்ரம பிரசுரங்கள்

தமிழ்

ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளியவை ரூ.அ.பை

ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம் ... 0 2 0

உபதேச நூன்மாலை (உபதேச வுந்தியார், உள்ளது நாற்பது, அனுபந்தம, அப்பளப்பாட்டு, ஆன்ம வித்தை அடங்கியது) ... 0 2 0

தேவிகாலோத்தரம்: ஞானாசாரவிசாரபடலம் (தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம், அத்தாமலகம், குருஸ்துதி சேர்ந்தது) ... 0 2 0

விவேக சூடாமணி (திருக்குதிருசிய விவேகம், நானார்? சேர்ந்தது) 0 6 0

ஸ்ரீரமண நூற்றிரட்டு (ஷை நான்கும் அடங்கியது) 0 14 0

உபதேச வுந்தியார் ... 0 0 6

உபதேச ஸாரம் (நாகரச்லோகமும், பாஷ்யத் தமிழ் மொழி பெயர்ப்பும்) ... 0 1 0

ஸத்தர்சனம் ,, ,, 0 6 0—0 8 0

நான் யார்? ... 0 0 6

நடனானந்த ஸ்வாமிகள் செய்தவை

* விசார சங்க்ரக வினாவிடை ... 0 2 0

* உபதேசமஞ்சரி ... 0 1 0

ஸ்ரீ ரமணஸ்தோத்ர மஞ்சரி ... 0 2 0

ஸ்ரீ ரமண நான்மணிமாலை ... 0 1 0

ஸ்ரீ ரமண அந்தாதி ... 0 1 0

ஸ்ரீ ரமண ஸ்தோத்ர ஷோடசம் ... 0 1 0

ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம் (ஸத்தியமங்கலம் வேங்கடரமணையரியற்றியது) ... 0 0 6

ஸ்ரீ ரமண சரித அகவல் (M. சிவப்பிரகாசம் பிள்ளை, B A., அவர்களியற்றியது.) ... 0 3 0

K.S. சேஷகிரி அய்யர் B.A., இயற்றியவை

மஹாபாரத வசனம் ... 1 0 0

உத்தம பக்தர்கள் ... 0 2 0

உத்தம பத்தினிகள் ... 0 2 0

ஈச்வரலீலை ... 0 8 0

இகபரசுகம் ... 0 8 0

---

* இவை யிரண்டும் ஸ்ரீ பகவானது உபதேசத் தொகுப்பு.

தெலுங்கு	ரூ.	அ.	பை
ஸ்ரீ ரமணகீதை (இரண்டாம்பதிப்பு) காலிகோ ...	0	8	0
டை போர்டு 0 6 0; டை ராப்பர் ...	0	4	0
ஸ்ரீ ரமண சரித்ரம் (பிரணவானந்தரியற்றியது)....	0	2	0
உள்ளது நாற்பது, நான் யார்? ...	0	2	0
உபதேச ஸாரம் ...	0	1	0
விசார ஸங்க்ரகம் ...	0	2	0
உபதேச மஞ்சரி ...	0	2	0
தேவிகாலோத்தர ஞானசாரவிசாரபடலவுரை ...	0	2	0
விவேக சூடாமணி ...	0	4	0
ஸ்ரீ ரமண சரித்ர சங்க்ரக பத்யம் ...	0	0	6
ஸ்ரீ ரமண ஸ்தோத்திரம் ...	0	0	6
பிரணவானந்தரின் நூல்கள்			
ஆத்ம ராமாயணம் ...	0	1	0
தத்வ போதம் ...	0	1	0
ஞானக்ரஸ்திதஞேயவஸ்துயாதரா ...	0	1	0
இந்த்ரகீதம் (பிரம்மஸ்ரீ காவ்யகண்ட கணபதி முனிவரியற்றியது) ...	0	1	0
ஸம்ஸ்க்ருதம்			
உபதேச ஸாரம் (நாகரமூலம் பாஷ்யத்துடன்)...	0	1	0
ஸத்தர்சனம் ,, ,, 1 0 0—	0	12	0
மலையாளம்			
உபதேச ஸாரம் ...	0	1	0
ஆங்கிலம்			
ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் சரித்ரம், உபதேசங்களுடன் பல ஆப்டோன் படங்களும் அடங்கியது (சேலம் B. V. நரஸிம்மஸ்வாமிகளியற்றியது) Half cloth bound	2	8	0
Wrapper	2	0	0
Full cloth bound and gilt copy	3	0	0
உபதேச ஸாரம் சாதா	0	4	0
டை காலிகோ	0	8	0
நான்யார் (Who am I)?	0	1	0
மகாபாரதம் (Part 1)	0	10	0
டஸன் வெபன்ஸ்	0	8	0

இவற்றோடு பகவான் ஸ்ரீ மஹர்ஷிகள் படங்களும் கிடைக்கும்.

காரியதரிசி, ஸ்ரீ ரமணாச்ரமம்,
திருவண்ணாமலை.

THE KESARI PRINTING WORKS, Madras.

பிழை திருத்தம்

க்கம்	வரி	இருப்பது	இருக்கவேண்டியது
7	15	*றிருக்கையிற்*	*றிருககையின்*
7	16	*றனுவி*	*த்னுவி*
18	4	*யதிகிறார்*	*வதிந்தனர்*
19	12	*றாக்குகின்றனர்*	*றழகுறவளர்த்துளார்*
19	22	*ரவாயை*	*ரவா அவை*